**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 202/2024** |
| **Ranking of witness** | **:** | **PW3** |
| **Name** | **:** | **தங்கராஜ்** |
| **Father's Name** | **:** | **த/பெ சின்னராஜ்** |
| **Age** | **:** | **45** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10-06-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

## முதல் விசாரணை :

நான் தற்போது சோளக்கொட்டாயில் பழக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 2024 ஆம் வருடம் ஒருநாள் இரவு 01.00 மணிக்கு மேல் சேலத்திலிருந்து கிருஷ்ணகிரி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் மேல்மாட்டுக்கண்ணூர் என்ற இடத்தில், பழக்கடையில் இருந்தபோது, ஒரு முட்டை வண்டி ஒன்று, டீ சாப்பிடுவதற்காக நின்று இருந்தது. அதன் பின்னால் பிக்கப் பூ லோடு வாகனம் ஒன்று, முன்னால் நின்று கொண்டிருந்த வாகனம் மீது மோதிவிட்டது. இதனால் ஓட்டுநருக்கு இடதுபுறத்தில் அமர்ந்திருந்த நபருக்கு அடிபட்டு சம்பவ இடத்திலேயே அந்த நபர் இறந்துவிட்டார். இரவு நேரம் என்பதால், பூ லோடு ஏற்றிவந்த வாகனத்தை பார்த்தேன். ஆனால், வாகனத்தை ஓட்டி வந்த நபரை நான் சரியாக பார்க்கவில்லை. விபத்தினால் வாகனத்தின் ஓட்டுநருக்கும் காயங்கள் ஏற்பட்டிருந்தது. பின்பு இரு வண்டிகளையும் கயிறு கட்டி இழுத்து, பிரித்தோம். பின்பு, அடிபட்டவரை ஆம்புலன்ஸ் வரவழைத்து, தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். போலீசார் இதுதொடர்பாக என்னை விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் போலீசார் விசாரணையின்போது, இரவு 01.30 மணிக்கு நான், பழவண்டியில் லோடு மேனாக இருந்துவந்ததாக நான் எதுவும் சொல்லவில்லை. நான் பழக்கடையில்தான் வேலை செய்துவந்ததாக போலீசார் விசாரணையில் சொன்னேன். பழக்கடையில் எத்தனை பேர் வேலை செய்து வருகிறார்கள் என்பதை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை. நின்று கொண்டிருந்ததாக கூறப்படும் டிப்பர் வாகன பதிவு எண் தெரியாது. அதேபோல் பிக்கப் வாகனத்தின் பதிவு எண் மற்றும் அந்த வாகனத்தை யார் ஓட்டினார்கள் என்ற விவரம் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தின்போது, நானும், இன்னொரு பையன் மட்டும்தான் இருந்தோம். அவர் பெயர் எனக்கு தெரியாது. விபத்து சம்பவம் பற்றி நான் உடனுக்குடன் போலீசாருக்கு தகவல் தெரிவித்துவிட்டேன். அங்கு அவர்கள் 15 நிமிடங்களுக்குள் வந்துவிட்டார்கள். விபத்து ஏற்படுத்தியதாக கூறப்படும் வாகனத்திற்கு சொந்தமான நபரை தொடர்புகொண்டு நான் தகவல் எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரி. ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பியதாக நான் கூறிய நிலையில், அவர்களின் பெயர் மற்றும் எங்கிருந்து வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை விபத்து நடைபெற்ற அன்று விசாரித்ததோடு சரி. பின்பு வேறு எங்கும் என்னை விசாரிக்கவில்லை. போலீசார் விசாரணையில் பழக்கடையில் வைத்து விசாரிக்கவில்லை

என்றும், போலீசாருக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், போலீசாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.06.10 13:00:20 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**தருமபுரி.**

**சாட்சியின் கையொப்பம்.**